## 2025 பிப்ரவரியில் முதல்வர் தலைமையில் புத்தொழில் மாநாடு!

# தமிழ்நாட்டில் 30,376 இளைஞர்கள் புதிய தொழில் முனைவர்களாக உருவாக்கம்!

## சட்டப் பேரவையில் – சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மானியத்தில் – 35 அறிவிப்புகளை வெளியிட்டு அமைச்சர் தா.மோ.அன்பரசன் பதிலுரை!

**சென்னை, ஜூலை 2- சட்டப்பேரவையில் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மானியத்தில் 35 அறிவிப்புகளை வெளியிட்டு அமைச்சர் தா.மோ.அன்பரசன் பதிலுரையில் தமிழ்நாட்டில் 30,376 இளைஞர்களை புதிய தொழில் முனைவர்களாக உருவாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் பதிலுரை வருமாறு :-

தமிழில் உயிர் எழுத்துகள் 12. ஆனால், நமக்கெல்லாம் கலைஞர் எனும் நான்கு எழுத்தையும் சேர்த்து உயிர் எழுத்துகள் 16. (மேசையைத் தட்டும் ஒலி) உயிரினும் மேலான உடன்பிறப்புகளே என கலைஞர் உச்சரிக்குபோதே, நமக்கு ஆயிரம் யானை பலம் கூடும். 70 ஆண்டுக் கால இந்திய அரசியலின் இயக்குநரே, கோபாலபுரத்து கோப்பெரும்சோழனே, காஞ்சித் தலைவன் அண்ணாவின் கணையாழியை வென்ற கலைஞர் பெருமானே, நீங்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.

வாராது வந்த மாமணியாய் தோன்றி, வளமான தமிழகத்தை வடிவமைக்கும் வரலாற்றுத் தலைவரே, எங்கள் முதல்வரே, பூச்சாண்டி காட்டிய திடீர் தலைவர்களுக்கெல்லாம் தேர்தலில் பூஜ்ஜியத்தை பரிசளித்த புதுமைத் தலைவரே, மதவெறிக்கும், மனிதநேயத்திற்குமான போரில், அன்பு எனும் ஆயுதம் ஏந்தி வென்ற அஞ்சுகம் தாய் பேரரே, அஞ்சாத வீரரே, அண்ணா இன்று இருந்திருந்தால், உங்களை ஆழத் தழுவி பாராட்டியிருப்பார், அமுதமழை பொழிந்திருப்பார். கலைஞர் இன்றிருந்திருந்தால் உங்கள் கண்ணங்களில் முத்துகளை பதித்திருப்பார். மூன்றாண்டு ஆட்சியில் முழுதாக மக்கள் மனதை கவர்ந்த முதல்வரே, தேர்தலை திராவிட திருவிழாவாக்கிய திசை சூரியனே உங்களையும் நான் வணங்குகிறேன்.

இளையசூரியன் உதயநிதி அவர்களே, பெரியாரின் கொள்கையும், அண்ணாவின் எளிமையும், கலைஞரின் அரசியல் ஞானமும், தளபதியாரின் உழைப்பும் கலந்து செய்த கழகத்தின் எதிர்காலமே, எங்கள் இளந்தலைவரே உங்களை நான் வணங்குகிறேன்.

அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கம்.

2024-2025 ஆம் ஆண்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மானியக் கோரிக்கையில், உரையாற்றுவதற்கு வாய்ப்பு வழங்கிய, நாங்கள் எல்லாம் உயிராக போற்றுகிற எங்கள் ஒப்பற்றத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எனது நன்றியை இந்த நேரத்தில் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குறு, சிறு, மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையில் சமத்துவம், சமூக நீதி, சமச்சீர் வளர்ச்சி ஆகியவற்றை குறிக்கோளாகக் கொண்டு ஆட்சி பொறுப்பேற்ற 3 ஆண்டுகளில் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், குறுங் குழும மேம்பாட்டு திட்டம், பெருங் குழும மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாடு கடன் உத்தரவாத திட்டம், தமிழ்நாடு வர்த்தக வரவு தள்ளுபடி தளம், அடுக்குமாடி தொழில் வளாகம், பணியாளர் தங்கும் விடுதிகள், தமிழ்நாடு SC/ST புத்தொழில் ஆதார நிதி, வட்டார புத்தொழில் மையங்கள், தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் என பல்வேறு புதிய திட்டங்களைக் கொண்டு வந்து, இன்றைக்கு இந்தத் துறையை மிகப் பெரிய வளர்ச்சிப்

## தாய்கோ வங்கி ரூ.1056.24 கோடி வைப்பு நிதி திரட்டி ரூ.12.75 கோடி இலாபம்!

பாதைக்கு கொண்டு சென்றவர் நம்முடைய முதல்வர் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அனைவரும் தொழில் தொடங்க வழிவகை செய்து வாய்ப்பளிப்பதில் சமத்துவத்தையும், பெண்கள், பட்டியலினத்தவர், பழங்குடியினர், சிறுபான்மையினர், மாற்றுத்திறனாளிகள் என எல்லோரையும் உள்ளடக்கி உயர்த்துவதில் சமூக நீதியையும், டெல்டா மற்றும் தென் மாவட்டங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கி புதிய திட்டங்களை செயல்படுத்துவதில் சமச்சீர் வளர்ச்சியையும் ஏற்படுத்தி சாதனை படைத்துள்ள முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த 3 ஆண்டுகளில் இந்தத் துறை செய்திருக்கிற சாதனைகளையும், திட்டங்களையும், நான் இந்த மாமன்றத்திற்கு அளிக்க விரும்புகிறேன்.

அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. ஆக தமிழ்நாட்டில் இருக்கிற பிற்படுத்தப்பட்ட, பின்தங்கிய மக்கள் ஆதி திராவிடர் பழங்குயின மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவேண்டும் என்பதற்காக வேறு எங்கேயும் கிடையாது, கடந்த ஆண்டு நம் மாநிலத்தில் முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

இந்த திட்டம் தொடங்கப்பட்ட ஒரே ஆண்டிலேயே பார்த்தீர்களென்று சொன்னால், ரூ.159 கோடியே 40 இலட்சம் மானியம் கொடுத்து, ரூ.302 கோடியே 86 இலட்சம் வங்கி கடனுதவி வழங்கப்பட்டு, 1,389 பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு தொழில் முனைவோர்களாக உருவாக்கி அவர்களுடைய வாழ்க்கையை வளப்படுத்தியிருக்கின்ற ஆட்சி, (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி என்பதை நான் பெருமையோடு இந்த அவையில் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு MSME துறையில் 5 வகையான கடன் வழங்குகிற திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. அதில், NEEDS, UYEGP, PMEGP, PM-FME, அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் ஐந்து திட்டங்கள் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய அரசு பொறுப்பேற்ற 3 ஆண்டுகளில் பார்த்தீர்ளென்று சொன்னால், இந்த ஐந்து திட்டங்

## புதியதாக 8 தொழிற்பேட்டைகள் உருவாக்கப்படும்

களிலும் ரூ.961 கோடியே 88 இலட்சம் மானியத்துடன் ரூ.2,615 கோடியே 30 இலட்சம் ரூபாய் வங்கி கடன் வழங்கப்பட்டு, இதுவரையில் இந்த மூன்று வருடத்தில் தமிழகம் முழுவதும் 30 ஆயிரத்து 324 இளைஞர்கள் புதிய தொழில் முனைவோர்களாக உருவாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இதன் மூலம் 3 இலட்சம் நபர்களுக்கு அரசு வேலைவாய்ப்பை நம்முடைய அரசு ஏற்படுத்தி தந்து இருக்கிறது.

10 ஆண்டு கால அதிமுக ஆட்சியில் 55 ஆயிரத்து 230 இந்தத் துறையில் தொழில் முனைவோர்களாக உருவாக்கப்பட்டார்கள். ஆனால் நம் அரசு பொறுப்பேற்ற 3 ஆண்டு காலத்தில் பார்த்தீர்களென்றால் 30 ஆயிரத்து 376 நபர்களை இந்த மூன்று வருடத்தில் தொழில் முனைவோர்களாக உருவாக்கிய பெருமை திராவிட முன்னேற்றக் கழக அரசிற்கு உண்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, MSME-க்கு வழங்கப்பட்ட மானியம் எவ்வளவு என்று பார்த்தீர்களென்றால் முதலீட்டு மானியம், மின் மானியம், வட்டி மானியம் என 10 வகையான MSME நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. இதில் நம் அரசு பொறுப்பேற்ற 3 ஆண்டுகாலத்தில், 15 ஆயிரத்து 22 நிறுவனங்களுக்கு ரூ.1,003 கோடியே 59 இலட்சம் ரூபாய் இன்றைக்கு MSME நிறுவனங்களுக்கு மட்டும் மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல இந்த மூன்று வருடத்தில் சமச்சீரான தொழில் வளர்ச்சி ஏற்படுத்திடவேண்டும் என்று டெல்டா மாவட்டங்களில் மட்டும் 285 கோடியே 42 இலட்சம் மானியத்துடன் 784 கோடியே 97 இலட்சம் வங்கி கடன் உதவி வழங்கப்பட்டு, டெல்டா மாவட்டத்தில் மட்டும் 12 ஆயிரத்து 10 புதிய தொழில் முனைவோர்களாக உருவாக்கியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 3 ஆண்டுகளில் புதிதாக உருவாக்கப்பட்ட மொத்தம் 30 ஆயிரத்து 376 தொழில்முனைவோர்கள் உருவாக்கியிருக்கிறோம். இதில் பார்த்தீர்களென்றால் 20 ஆயிரத்து 979 தொழில்முனைவோர்கள் யார் என்று பார்த்தீர்களென்றால் 5,098 பெண்கள், 13,473 பட்டியலினத்தவர்/பழங்குடியினர், 2,408 சிறுபான்மையினர்/ மாற்றுத்திறனாளிகள் புதிய தொழில்முனைவோர்களாக உருவாக்கப்பட்டு, பொருளாதாரத்திலும், சமத்துவ, சமூக நீதியை நிலைநாட்டுகிற அரசாக நம்முடைய அரசு விளங்கிக்கொண்டிருக்கிறது.

### புதியதாக 8 தொழிற்பேட்டைகள்!

இன்றைக்கு SIDCO-வை பார்த்தீர்களென்று சொன்னால் MSME நிறுவனங்கள், தொழில்களின் வளர்ச்சிக்காக முதல்வர் அவர்கள் இந்த 3 ஆண்டுகளில் ரூ.295 கோடி மதிப்பீட்டில், 512 ஏக்கர் பரப்பளவில் 8 புதிய தொழிற்பேட்டைகள் ஏற்கெனவே தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 248 ஏக்கர் பரப்பளவில் ரூ.115 கோடியே 53 லட்சம் மதிப்பீட்டில், திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், கடலூர், திருவாரூர், சேலம், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில், 8 புதிய தொழிற்பேட்டைகள் அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.



குறுந்தொழில்கள் தொடங்கிட நகர்புரங்களில் எங்கேயும் இடம் இல்லை. குறுந்தொழிற்சாலைகள் அமைப்பதற்கு அரசு புறம்போக்கு இடம் கிடையாது. இப்போது நாங்கள் என்ன செய்கிறோம் என்றால், அடுக்குமாடி கட்டடம் கட்டி, அங்கே ஆட்களை நியமிக்கிறோம். அது மாதிரி இருக்கிற சென்னையில் கிண்டி, அம்பத்தூர் தொழிற்பேட்டைகளில் ரூ.158 கோடியே 62 லட்சம் மதிப்பீட்டில் 264 தொழில் கூடங்கள் கொண்ட புதிய அடுக்குமாடி தொழில் வளாகங்கள் கட்டி, அதில் தொழில் கூடங்களை அமைக்கின்ற பணியை நம்முடைய அரசு செய்து கொண்டிருக்கிறது.

### ரூ.22 கோடி மதிப்பீட்டில் தொழிலாளர்கள் தங்கும் விடுதி!

கடந்த பிப்ரவரி மாதம் நம்முடைய உதயநிதி அவர்கள்தான் திறந்து வைத்தார்கள். கோயம்புத்தூர் - குறிச்சி தொழிற்பேட்டையில் ரூ.22 கோடி மதிப்பீடில் கட்டப்பட்டு வரும் தொழிலாளர்கள் தங்கும் விடுதி ஓரிரு மாதங்களில் பணிகள் முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல பொது வசதி மையம், MSME நிறுவனம் தனது தேவைக்கு அதிக விலை கொண்ட நவீன இயந்திரங்களையெல்லாம் வாங்க முடியாது. சிறு தொழிலாளர்கள், நிறுவனங்கள் ஆகியோர்களால் வாங்க முடியாது. அதனால் நவீன இயந்திரங்கள் மற்றும் சோதனை கருவிகள் வாங்க இயலாத காரணத்தால், தமிழ்நாடு சிட்கோ MSME நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக அவர்கள் கூட்டாக பயன்படுத்திக்கொள்ளும் வகையில், 49 பொது வசதி மையங்களுக்கு ஒப்புதல் பெற்று 32 பொது வசதி மையங்கள் தற்போது பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது. இந்தியாவிலேயே இந்தத் திட்டத்தை தமிழ்நாட்டில் தான் முதலிடமாக செயல்படுத்துகிறோம்.

அதுமட்டுமல்ல, Startup, இன்று மிகப் பெரிய அளவிலே நம்முடைய தமிழ்நாட்டிலே வளர்ந்து வருகிற ஒரு அமைப்பு. உலக அளவிற்கு தமிழ்நாடு Startup நிறுவனங்களை உயர்த்திட, முதலமைச்சர் அவர்கள் Startup இயக்கத்திற்கு தனி முக்கியத்துவம் அளித்து, அதற்கென முதன்மை செயல் அலுவலர் CEO ஒருவரை நியமனம் செய்து அவருக்குக்கீழ் 70 அதிகாரிகளை நியமித்து நம்முடைய Startup இயக்கத்திற்கு ஒரு புத்துணர்வை ஏற்படுத்தி இருக்கிற முதல்வர் நம்முடைய தலைவர் அவர்கள்.

முதல்வர் அவர்கள் Startup நிறுவனங்களின் வளர்ச்சிக்கு தகுந்த சூழலை உருவாக்கியதால், தமிழ்நாட்டில் 2021 மார்ச் வரை சுமார் 2,300 Start up நிறுவனங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில், தற்போது இந்த எண்ணிக்கை 8,500-க்கும் மேல் உயர்ந்துள்ளது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் Startup தரவரிசைப் பட்டியலில் இந்திய அளவில் கடைசி தரவரிசையில் இருந்தது நம்முடைய தமிழ்நாடு. கழக அரசு பொறுப்பேற்ற பிறகு 2021-ல் மூன்றாம் இடத்திற்கு முன்னேறி லீடர் விருதினை நாம் பெற்றோம். தற்போது, ஒன்றிய அரசு வெளியிட்ட 2022 ஆம் ஆண்டிற்கான தரவரிசை பட்டியலில் Startup தமிழ்நாடு நிறுவனம் இந்திய அளவில் முதல் இடம் பிடித்து சிறந்த செயற்பாட்டாளர் என்ற விருதினை நாம் பெற்றிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கழக அரசு பொறுப்பேற்றதிலிருந்து, தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையில் Startup நிறுவனங்களை உருவாக்க, ஆதார நிதி வழங்கும் (TANSEED) திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு முதல்வர் அவர்களால் 2021-2022, 2022-2023 ஆம் ஆண்டுகளில் 150 புத்தொழில் நிறுவனங்களுக்கு ரூ.15 கோடி நிதியும், ஆதி திராவிடர், பழங்குடியின இளைஞர்கள் Startup நிறுவனங்களை தொடங்கிட ரூ.80 கோடி சிறப்பு நிதியும் ஒதுக்கீடு செய்தார்கள். இந்த திட்டங்களின்கீழ் இதுவரை, 170 Startup நிறுவனங்களுக்கு, ரூபாய் 69 கோடியே 15 இலட்சம் அரசு நிதியுதவி வழங்கியிருக்கிறது.

### முதல்வர் தலைமையில் புத்தொழில் மாநாடு!

Startup நிறுவனங்களை உலகளவில் முன்னெடுத்து செல்ல, 2025 பிப்ரவரி மாதம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் உலக புத்தொழில் மாநாடு நடத்தப்படயிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தொழில் முனைவோர் பயிற்சி திட்டம், தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க பயிற்சி நிறுவனத்தின் மூலமாக இந்தியாவிலேயே முதன் முதலாக, பள்ளிகளிலேயே மாணவர்களுக்கு தொழில்முனைவு மற்றும் புத்தாக்க சிந்தனையை உருவாக்க வேண்டுமென்று, முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தின்கீழ் இதுவரை 4,483 பள்ளிகளில் உள்ள 12 இலட்சத்து 45 ஆயிரம் மாணவ, மாணவியர்களுக்கும், கல்லூரியில் பயிலும் 6 இலட்சத்து 40 ஆயிரம் மாணவ, மாணவியர்களுக்கும் தொழில் முனைவு மற்றும் புத்தாக்க ஊக்குவிப்பு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்கப்படுத்திட புத்தாக்க பற்றுசீட்டு திட்டத்தின்கீழ் கடந்த 3 ஆண்டுகளில் 326 புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு ரூ.8 கோடியே 44 இலட்சம் நிதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

100 கோடி ரூபாயில் கடன் உத்தரவாத திட்டத்தை முதல்வர் அவர்கள் அறிவித்தார். இந்தியாவிலேயே முதல் முதலாக முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட "தமிழ்நாடு கடன் உத்தரவாத திட்டத்தின்" கீழ் இதுவரை 38 ஆயிரத்து 270 தொழில்முனைவோர்களின், ரூ.5 ஆயிரத்து 715 கோடி வங்கி கடனுக்கு, மாநில அரசின் கடன் உத்தரவாதமாக ரூ.563 கோடியே 12 இலட்சம் அரசு வழங்கியிருக்கிறது.

தமிழ்நாடு வர்த்தக வரவுகள் மற்றும் தள்ளுபடி தளம் Tamil Nadu-TReDS. இது ஒரு அற்புதமான திட்டம். பெரிய நிறுவனங்கள், சிறிய நிறுவனங்கள் கொடுக்கிற பொருட்களை வாங்கிவிட்டு, 6 மாதங்கள், 1 வருடம் பணம் தராமல் இழுத்தடிப்பார்கள். அப்பேர்ப்பட்ட நிறுவனங்களில் கொடுக்கப்படுகின்ற cheque-ஐ எடுத்துக் கொண்டு வந்து bank-ல் காண்பித்தாலே

## டான்சி நிறுவனம் ரூ.317.68 கோடியில் பொருட்கள் உற்பத்தி -ரூ.325.50 கோடிக்கு விற்பனை!

பணம் கொடுக்கலாம். அதுமாதிரியான ஒரு திட்டத்தை கடந்த ஆண்டு அறிவித்து, 1,491 MSME நிறுவனங்களுக்கு இதுவரை ரூ.2 ஆயிரத்து 139 கோடி மதிப்பில் வங்கி கடன் வழங்கப்பட்டிருக்கிறது.

MSME நிறுவனங்கள், வழங்கிய பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான தொகையை பெருநிறுவனங்கள் வழங்காதபட்சத்தில், பெரிய நிறுவனங்களில் சிறிய நிறுவனங்கள் பொருட்களை சேர்த்துக் கொடுத்துவிடுகிறார்கள். சிலேபேர் ஏமாற்றுவார்கள். சிறிய நிறுவனங்கள், MSME நலிந்து போய்விடும் அல்லவா! அதுபோன்ற சிறிய நிறுவனங்களை காப்பாற்றுவதற்காக சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை ஆகிய 4 மண்டலங்களில் வசதியாக்கல் மன்றங்கள் அமைக்கப்பட்டு, கழக அரசு பொறுப்பேற்ற 3 ஆண்டுகளில் இம்மன்றங்கள் மூலமாக 2,008 MSME நிறுவனங்களுக்கு ரூ.374 கோடியே 76 இலட்சம் ரூபாயை பெற்று தந்திருக்கிறோம்.

### தொழிற் கண்காட்சி நடத்த நிதி ஒதுக்கீடு!

அதேபோன்று, FaME-Tamil Nadu. MSME நிறுவனங்களுக்கு தேவையான நிதி வசதி, சந்தை வாய்ப்புகள், ஏற்றுமதிக்கு உதவுதல் உள்ளிட்ட சேவைகளை FaME-Tamil Nadu அளித்து வருகிறது. உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் இந்நிறுவனத்தின்மூலம் நடத்தப்பட்ட வாங்குபவர் - விற்பனையாளர் சந்திப்பில் 174 MSME நிறுவனங்களிடமிருந்து ரூ.42 கோடியே 30 இலட்சம் அளவிற்கு கொள்முதல் ஆணைகள் முடிவு செய்யப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) தொழிற் கண்காட்சி நடத்த 11 சங்கங்களுக்கு ரூ.1 கோடியே 91 இலட்சமும், பல்வேறு கண்காட்சிகளில் பங்கு பெற்ற 58 MSME நிறுவனங்களுக்கு ரூ.69 இலட்சத்து 76 ஆயிரம் நிதியுதவி அளிக்கப்பட்டிருக்கிறது.

பெருங்குழுமங்கள். தமிழ்நாட்டின் MSME தொழில் நிறுவனங்களின் உற்பத்தி தரத்தினை உலக அளவில் உயர்த்திடும் வகையில் காஞ்சிபுரம் மாவட்டம், திருமுடிவாக்கத்தில் ரூ.47 கோடியே 62 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டு வரும் துல்லிய உற்பத்தி பெருங்குழுமத்தின்மூலம் MSME நிறுவனங்கள் பயன்பெறும் வகையில், தொழில்நுட்ப கருவிகளை பரிசோதிக்கும் பொது வசதி மையமாக உயர்தொழில்நுட்ப பரிசோதனை கூடம், விரைவில் தமிழ்நாடு முதலமைச்சருடைய திருக்கரத்தால் திறந்து வைக்கப்பட இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோயம்புத்தூர், தென் மாவட்டங்களில் தேங்காய் நாரிலிருந்து உற்பத்தி செய்யப்படும் கயிறு, பித், ஆகிய மதிப்பு கூட்டப்பட்ட கயிறு பொருட்களுக்கு வெளிநாடுகளில் நல்ல வரவேற்பு இருக்கிறது. இதை உணர்ந்த தலைவர் அவர்கள், தென்னை நார் தொழிலை ஊக்குவிக்கவும் சந்தை வாய்ப்பை உலக அளவில் விரிவுப்படுத்தவும், கோயம்புத்தூரில், ரூ.5 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம் (TAN-COIR) தலைவர் அவர்கள் தொடங்கி வைத்தார். தென்னை நார் தொழில் கொள்கை Coir Policy வெளியிட்டிருக்கிறோம். மேலும், கோவையில், ரூ.4 கோடி மதிப்பீட்டில் உலகதரத்திலான பரிசோதனை கூடம் அமைக்கும் பணி இப்போது தொடங்கப்பட உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில், பேராவூரணி, பொள்ளாச்சி, K-பரமத்தி, குண்டடம், உடுமலைபேட்டை, விருதுநகர் ஆகிய 6 மாவட்டங்களில் ரூ.38 கோடியே 10 இலட்சம் மானியத்துடன் ரூ.51 கோடியே 8 இலட்சம் மதிப்பில், கயிறு குழுமங்கள் அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதற்காக, இதுவரை ரூ.9 கோடியே 23 இலட்சம் அரசு மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது.

### டான்சி நிறுவனம்!

அடுத்து, டான்சி. தமிழ்நாடு சிறு தொழில் வணிக நிறுவனமான-டான்சி நிறுவனத்தின்கீழ் 20 உற்பத்தி நிலையங்களும், 2 காட்சியகத்துடன்கூடிய விற்பனை நிலையமும் இயங்கி வருகிறது.

இதுவரை எந்த காலத்திலும் இல்லாத அளவிற்கு, 2022-2023 ஆம் ஆண்டு ரூ.138 கோடி மதிப்பீட்டிலும், 2023-2024 ஆம் ஆண்டு ரூ.118 கோடி மதிப்பீட்டிலும், பொருட்களை உற்பத்தி செய்து சாதனை படைத்து வருகிறது. கழக அரசு பொறுப்பேற்ற 3 ஆண்டுகளில் இதுவரையில் இல்லாத அளவிற்கு ரூ.317 கோடியே 68 இலட்சத்திற்கு பொருட்களை உற்பத்தி செய்து, ரூ.325 கோடியே 50 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று கூட்டுறவு சங்கங்கள். கிராமப்புர தொழிலாளார்களுக்கு தொடர் வேலைவாய்ப்பை வழங்கி, அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்திட வேண்டுமென்பதற்காக தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், INDCOSERVE, SAGOSERVE ஆகியவை செயல்பட்டு வருகின்றன. தொழில் வணிகத் துறையின் கீழ் செயல்படும் 269 சங்கங்களில் 70 ஆயிரத்து 37 நபர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இந்த தொழிற்கூட்டுறவு சங்கங்கள், கடந்த நிதியாண்டில் மட்டும் ரூ.1308 கோடியே 10 இலட்சம் அளவிற்கு விற்பனை செய்து, ரூ. 50 கோடியே 15 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

இருளர் பாம்பு பிடிப்போர் தொழிற்கூட்டுறவு சங்கமானது பாம்பு பிடிப்போர்களுக்கு தொடர்ச்சியான வேலைவாய்ப்பு வழங்குவதை நோக்கமாக கொண்டு செயல்படுகிறது. விஷ முறிவு மருந்து தயாரிக்க சங்க உறுப்பினர்கள் கொண்டு வரும் பாம்புகளிடமிருந்து எடுக்கப்படும் நஞ்சு பயன்படுத்தப்படுகிறது. இந்த சங்கம் கடந்த 3 ஆண்டுகளில் 1,807 கிராம் நஞ்சினை எடுத்து ரூ. 5 கோடியே 43 இலட்சத்திற்கு விற்று, ரூ. 2 கோடியே 37 இலட்சம் இலாபம் ஈட்டியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### தேயிலை உற்பத்தி!

அதேபோல் INDCOSERVE நிறுவனம், தமிழ்நாடு சிறு தேயிலை உற்பத்தியாளர்களுக்காக தொடங்கப்பட்ட INDCOSERVE நிறுவனம் கடந்த ஆண்டு, 11 ஆயிரத்து 300 மெட்ரிக் டன் தேயிலை உற்பத்தி செய்து, தேயிலை விவசாயிகளுக்கு ரூ.57 கோடியே 88 இலட்சம் வழங்கியுள்ளது. மேலும், நபார்டு வங்கி நிதி உதவியுடன் ரூ.68 கோடியே 60 இலட்சம் செலவில் 15 தொழிற்சாலைகள் நவீனப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 7 தொழிற்சாலைகள் பணிகள் முடிவுற்று பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மீதமுள்ள 8 தொழிற்சாலைகளில் இந்த ஆண்டு இறுதிக்குள் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வரவிருக்கிறது.

தேயிலை வாரியம் நிர்ணயம் செய்யும் பசுந்தேயிலை விலைக்கு ஈடான விலையை சிறு தேயிலை விவசாயிகள் பெற்றிட பசுந்தேயிலை கிலோ ஒன்றிற்கு ரூ.2 வீதம், ஆதார விலையினை மானியமாக நம்முடைய அரசு வழங்கி வருகிறது. இதற்காக 2022-2023 ஆம் ஆண்டிற்கு ரூ.5 கோடி தமிழக அரசால் வழங்கப்பட்டது. 2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.8 கோடியே 51 இலட்சம் இந்த நிதி ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு விரைவில் அந்த விவசாயிகளுக்கு வழங்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இதன் மூலம், சுமார் 27,000 தேயிலை விவசாயிகள் பயன் பெறுவர்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று SAGOSERVE, மரவள்ளி கிழங்கு பயிரிடும் விவசாயிகள் ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை கிடைத்திட தொடங்கப்பட்ட சங்கம்தான் இந்த SAGOSERVE கூட்டுறவு சங்கம். கழக அரசில் ஆண்டு தோறும் வர்த்தகம் அதிகரித்து கடந்த ஆண்டு மட்டும் ரூ. 1,741 கோடியே 47 இலட்சம் விற்பனை செய்து, ரூ.11 கோடியே 12 இலட்சம் இலாபம் ஈட்டி உள்ளது.

### தாய்கோ வங்கி!

அதேபோன்று தாய்கோ வங்கி, MSME நிறுவனங்களுக்கு கடன் உதவிகள் வழங்க தொடங்கப்பட்ட வங்கிதான் தாய்கோ வங்கி. கடந்த ஆண்டில் மட்டும் ரூ.1,056 கோடியே 24 இலட்சம் வைப்பு நிதி திரட்டி ரூ.12 கோடியே 76 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், MSME துறையை, இந்திய அளவில் தமிழகத்தை முதல் மாநிலமாக கொண்டு வர தொடர்ந்து செயல்படுவோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே உரையாற்றிய நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் காந்தி எங்களுடைய பகுதிக்கு தென்னை நார் தொழிலை ஊக்கப்படுத்த வேண்டுமென்பதற்காக coir அலுவலகம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். நம்முடைய முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நிச்சயமாக அங்கு ஒரு அலுவலகம் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோன்று நம்முடைய ராமச்சந்திரன் உரையாற்றுகிறபோது முதலீட்டு மானியம் எல்லாம் சில இடங்களில் காலதாமதம் ஆகிறது என்று சொன்னார். அது எந்த இடம் என்று சொன்னால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு தொடர்ந்து அந்த நிதியுதவி வழங்குவதற்கு நிச்சயமாக நாங்கள் ஏற்பாடு செய்வோம். அதேபோன்று மின்சார பிரச்சினையை குறித்து சொன்னார். நாம்தான் peak hour charge உச்சநேர மின் நுகர்வோர் கட்டணத்தை 25 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதமாக குறைத்திருக்கிறோம். உச்சபட்ச நேர மின் நுகர்வோர் கட்டணத்தை smart metre பொருத்தும் வரை தள்ளி வைத்திருக்கிறோம்.

loss on network கட்டணத்தை 50 விகிதமாக குறைந்திருக்கிறோம். இந்த 3 வேலைகளை செய்ததனால், தமிழ்நாடு அரசு மின்சாரத் துறைக்கு, சென்ற ஆண்டில் MSME நிறுவனங்களுக்காக ரூ.330 கோடி, 81 இலட்சம் வழங்கியுள்ளது. நடப்பு ஆண்டில், (குறுக்கீடு) நாங்கள் தான் கட்டணத்தைக் கொடுத்துவிடுகிறோமே. நடப்பு ஆண்டில் முதலமைச்சர் அவர்கள் 351 கோடியே 77 இலட்சம் நிதி ஒதுக்கி உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறந்தாங்கி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தி.ராமச்சந்திரன் பேசுகிறபோது, SIDCO தொழிற்பேட்டைகளை உருவாக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அரசு, நகரங்களிலும், நகரங்களின் பகுதிகளிலும் அரசு புறம்போக்கு இடங்களை தேடிக்கொண்டிருக்கிறது. தனியார் நிலங்களும் இருக்குமேயானால் அதனை வாங்கி, SIDCO தொழிற்பேட்டைகளை உருவாக்குவதற்கு அரசு ஏற்பாடுகளை செய்துகொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், இன்றைக்கு 50 வெட்டுத் தீர்மானங்கள் பெறப்பட்டுள்ளன. 50 வெட்டுத் தீர்மானங்களில், அதிக அளவில் SIDCO தொழிற்பேட்டைகள் கோரியிருக்கிறார்கள், MSME மின்சாரக் கட்டணம் ஏறிவிட்டது. வட்டி மானியத்தைத் தள்ளுபடி செய்ய வேண்டும் எனவும் பலர் கோரியிருக்கின்றனர். பெறப்பட்ட கடனை தள்ளுபடி செய்ய வேண்டும் எனவும் பலர் கோரியிருக்கின்றனர். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து அரசு தள்ளுபடி செய்ய முடியாது. ஆனால், அரசின் நமது ஆட்சி பொறுப்பேற்ற பிறகு அதிக அளவிலான திட்டங்களை செயல்படுத்தியிருக்கிறோம். 50 வெட்டுத் தீர்மானங்களையும் நான் படித்துப் பார்த்திருக்கிறேன். முடிந்தவரையில் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அனைத்துப்பிரச்சினைகளையும் முழுவதுமாக தீர்த்துவைத்து, MSME நிறுவனங்களின் வளர்ச்சிக்கு அரசு பாடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 35 அறிவிப்புகள் உள்ளன.

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்